# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 26.3.2018 | 1) அரசு ஆணை எண்7 ந.நி.ம.கு.வ.துறை நாள். 3.01.2011ல் தூத்துக்குடி மாநகராட்சியுடன் 5 கிராம ஊராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக ஆணையிடப்பட்டது. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் ஊதிய ஏற்ற முறையில் பணிபுரிந்து வந்த பணியாளர்களை மாநகராட்சியில் உள்ள பணியிடங்களில் ஈர்த்துக்கொள்ள பார்வை 2ல் காணும் அரசாணை 119 ந.நி.ம.கு.வ.துறை நாள் 15.12.12 ன் வாயிலாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வரசாணைகளில் இணைப்பு IV ல் பல்வேறு வகையிலான தொகுப்பூதியம் பெற்று வருபவர்களின் விவரம் இவ்வலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் பட்டியலிடப் பட்டுள்ளது. இதன்படி இதன் சுருக்க விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.<br>சி1. 13473/2011 | 54)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| பணியிடத்தின் பெயர் | மாத தொகுப்பூதியம் மற்றும் /தினக்கூலி விவரம் | தொகுப்பூதிய பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை |
| 1)OHT. Operators | 2040/- (Consolidated Pay.) | 27 நபர்கள் |
| 2)Pump Operators | 2040/- (Consolidated Pay) | 10 நபர்கள் |
| 3)Pump Operators | 600/- (Consolidated Pay) | 16 நபர்கள் |
| 4)Sanitary workers | 1330/- (Consolidated Pay) | 4 நபர்கள் |
| 5)Sanitary workers | 1370/- (Consolidated Pay) | 42 நபர்கள் |

| | | |
|---|---|---|
| 6)Sanitary workers | 600/- (Consolidated Pay) | **9** நபர்கள் |
| 7)Sanitary Supervisors | 4000/- (Consolidated Pay) | **3** நபர்கள் |
| 8)Street light Operator | 2000/- (Consolidated Pay) | **1** நபர் |
| 9)Street light Operator | 600/- (Consolidated Pay) | **1** நபர் |
| 10)Tractor Driver | 200/- (Daily Wages) | **1** நபர் |
| 11)Night watchman | 200/- (Daily Wages) | **1** நபர் |
| | கூடுதல் | **115** பணியாளர்கள் |
| | இந்நிலையில் இந்த அரசாணையில் மேற்கண்ட பட்டியிலில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகுப்பூதிய மற்றும் தினக்கூலி பணியாளர்களை பொருத்தமட்டில் இவ் அனைவரும் எவ்வித பணி விதிகளின் கீழும் பணியமர்த்தப்படவில்லை என்றும் இதன் காரணமாக இப்பணியாளர்களை பொருத்தமைட்டில் தற்போதைய நிலையினை ( Status-Quo ) அவ்வாறே தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>இதனை அடுத்து இப்பணியாளர்களை இம் நகராட்சியில் ஏற்கனவே உள்ள பணியிடங்களில் பூர்த்தி செய்து கொள்ளவோ அல்லது கூடுதல் தொகுப்பூதியம் வழங்கி ஈடுபடுத்திக்கொள்வது குறித்து அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக விரிவான கருத்துருக்கள் அனுப்பப்பட்ட நிலையில் பார்வை 3ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் இப்பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தும்பட்சத்தில் இவர்களுக்கான செலவினம் குறித்தும் அதனை ஏற்க மாநகராட்சி தயாராக உள்ளதா என கோரப்பட்டதற்கு இணங்க இது குறித்த விஷயங்கள் வரைவு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. எனினும் இப்பாருள் மீது எவ்வித இறுதி உத்திரவும் நாளது தேதி வரை பெறப்படவில்லை.<br><br>இந்நிலையில் மேற்கண்டவாறு தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் தங்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகுப்பூதியம் / தினக்கூலியினை வைத்து வாழ்க்கை நடத்த இயலவில்லை என்றும் தற்போதைய விலை ஏற்றம் மற்றும் பொருளாதார சூழ் நிலையினைக் கருத்தில் கொண்டு ஊதியத்தினை அதிகப்படுத்தி வழங்கிட தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். | |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் இதே போன்று மதுரை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு முதலில் ரூ 5000/– என மாத தொகுப்பூதியம் நிர்ணயம் செய்தும் அதனை அடுத்து அம்மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை எண் மநி/30/490/2016 நாள் 6.10.17ல் அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி உரிய நிபந்தனைக்கு உட்பட்டு 1.10.2017 முதல் மாத தொகுப்பூதியத்தினை ரூ 8000/– ஆக உயர்த்தியும் ஆணை பிறப்பிப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் மேற்கண்ட விவரப்படியான பணியாளர்களில் இன்றைய நாளில் பணியில் உள்ளவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் 1.4.2018 முதல் ரூ. 6000/– ஒரே சமமான தொகுப்பூதியம் அரசின் பின்னேற்பு ஆணை எதிர்நோக்கி உரிய நிபந்தனையின் பேரில் 01.03.2018 முதல் வழங்குவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –**<br><br>அரசின் பின்னேற்பு ஆணையினை முற்றிலும் எதிர்நோக்கி கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் 01.03.2018 முதல் ரூ 6000/– மாத தொகுப்பூதியம் வழங்கிட ஒப்புதல் வழங்கலாம்.<br><br>1) இத்தொகுப்பூதிய உயர்வானது அரசுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வரும் கருத்துரு மீது பிறப்பிக்கப்படும் இறுதி உத்திரவுக்கு முற்றிலும் கட்டுப்பட்டதாகும்.<br>2) ஏற்கனவே அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வரும் கருத்துரு அரசால் ஏற்கப்படாமல் நிராகரிக்கப்படும் பட்சத்தில் மேற்படி நிர்ணயம் செய்து வழங்கப்படவுள்ள தொகுப்பூதியம் கூடுதல் தொகையானது சம்பந்தப்பட்ட வர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்படும்.<br>3) மேற்படி தொகுப்பூதிய உயர்வினை காரணம் காட்டி பணி நிரந்தரம், வேலை வாய்ப்பு பணி மூப்பு, பதவி உயர்வு, வணிவரன்முறை தொடர்பாக யாதொரு கோரிக்கையும் எந்த சூழ்நிலையிலும் ஏற்கப்படமாட்டாது. இதற்கான ரூ. 100/– மதிப்பு கொண்ட பத்திரத்தில் உரிய உறுதி மொழியினை Notary Public அவர்களிடமிருந்து பெற்று தாக்கல் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>எனவே 01.03.2018 முதல் தொகுப்பூதியத்தினை அரசின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி மாதம் | |

| | | |
|---|---|---|
| | ரூ 6000/– ஆக மேற்படி நிபந்தனைக்குட்டு வழங்குவதற்கு தனி அலுவலர் அவர்களுக்கு பொருள் வைப்பது குறித்து முடிவு செய்ய கோப்பு பணிந்தனுப்பப்படுகிறது.<br>ந.க.எண்.1373/2011/சி1 | |
| | 2) கதவு எண்.1 கிரேட்காட்டன் ரோடு, தூத்துக்குடி முகவரியும் நகராட்சி அலுவலகம் இயங்கி வந்த போது அலுவலகக் கட்டிடத்தின் தரை தளத்தில் ஆவணக் காப்பக அறை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.<br>இந்நகராட்சியானது மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய ஐந்து பஞ்சாயத்து பகுதிகளை ஏற்கனவே இருந்த நகராட்சி பகுதிகளுடன் ஒன்றாக இணைத்த 05.08.2008ல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 60 வது வார்டுகளை உள்ளடக்கி வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br><br>இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட போது அலுவலக ஆவணங்களை பாதுகாத்து பராமரித்திட ஆவணக் காப்பக எழுத்தர் மற்றும் ஆவணக் காப்பக உதவியாளர் என இரு பணியாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள். சூமற்படி பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றதை தொடர்ந்து மேற்படி பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருந்து வந்ததால் ஆவணக் காப்பக அறையினை சரியாகவும் முறையாகவும் பராமரிக்கப்படாமலும் தொடர் நடவடிக்கை களின்றியும் இருந்து வருகிறது.<br><br>இதனால் இவ்வலுவலக தொடர்புடைய தேவையான முந்தைய பழைய விபரங்கள் அறிய இயலாத நிலை உள்ளதாலும் இனி வரும் காலங்களில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் அலுவலகத்தில் ஆவண காப்பக அறையின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு புதிய மாநகராட்சி மைய அலுவலகக் கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் ஆவணக் காப்பக அறை அமைத்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 800000/– (எட்டு லட்சம் மட்டும்) ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>எச்1/1089/2018 | 55) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட முள்ளக்காடு 1 கிராமம் புல எண் 218/1எ க்குரிய மொத்த பரப்பளவு இடத்தில் 1.46.0 ஹெக்டேரில் 20 செண்ட் நிலம் தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் | 56) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அமைவதால், மேற்படி இடத்தில் முத்தையாபுரம் காவல் நிலையம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 22.03.2018ம் தேதிய ந.க.எண். டி3/33239/2014 எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கூறிய இடம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைகிறது எனவும் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்றும், நில அளவை ஆவணங்களின்படி தூத்துக்குடி தொழில் துறைக்கு சொந்தமான பகுதியில் அமைவதால் நில உபயோகம் மாற்றம் செய்வதற்கு எவ்வித ஆட்சேபணை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்காணும் அறிக்கையின்படியும் மேற்படி புல வரைபடம் மற்றும் அ பதிவேடு பதிவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி புல வரைபடம் மற்றும் அ பதிவேடு பதிவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி இடத்தில் முத்தையாபுரம் காவல் நிலையம் கட்டுவதற்கும் நில உபயோகம் மாற்றம் செய்வதற்கும் மாநகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவிக்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.எப்1/115302018 | |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தூத்துக்குடி வட்டம் மீளவிட்டான் பகுதி 1 கிராமம் புல எண் 1688 , 1689/1 1689/2க்குரிய மொத்த பரப்பளவு இடத்தில் 2.04.20 ஹெக்டேர் (5 ஏக்கர் பரப்பளவு இடம்) கிராம நகரளவை ஆவணங்களின்படி தொழில்துறை புறம்போக்கு வகைபாட்டில் அமைகிறது எனவும் மேற்படி இடம் தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைவதால், மேற்படி இடத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பினை அரசு காவல் துறையினருக்கு உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கு நிலமாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் தூத்துக்குடி அவர்களின் 02.02.2018ம் தேதிய ந.க. டி3/38066/2013 எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கூறிய இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை எனவும், தொழிற்துறைக்கு சொந்தமானதாக உள்ளதால் நில உபயோகம் மாற்றம் செய்வதற்கு எவ்வித ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்காணும் அறிக்கையின்படியும் மேற்படி மனை தொடர்பான புல வரைபடம் மற்றும் அ பதிவேடு பதிவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி மனைக்கான உபயோகம் மாற்றம் செய்வதற்கு மாநகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவிக்க மாமன்றம் | 57)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.எப்1/1151/2018 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சியில் கட்டிடம் கட்டுபவர் மற்றும் வரைபடவாளர் உரிமம் புதுப்பிக்க வருடம் 10 வரைபடங்கள் தயார் செய்தால் தான் உரிமம் புதுபித்து வழங்குவது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு 432 (12சி) தமிழ்நாடு சட்டம் 27/2008ன் படி நிபந்தனை விதிக்குட்பட்டு (எண்.5) மாமன்றம் தீர்மான எண். 44 நாள் 30.03.2012ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.<br>அதன்படி கட்டிட வரைபடவரைவாளர்கள் 10 கட்டிட விண்ணப்பங்கள் சமர்ப்பித்தால் மட்டுமே கட்டிட வரைவாளர் உரிமம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நடைமுறையில் வரைபடம் அனுமதி வழங்கப்படுவதற்கு மட்டும் உரிய கட்டணம் பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அனுமதி மறுப்பதற்கும் அல்லது வரைபடம் திருப்புவதற்கும் எந்தவிதமான உத்திரவு வழங்க இயலாத நிலை உள்ளதால் கட்டிட வரைபடவாளர்களால் வரைபடம் தயார் செய்து சமர்ப்பிக்க இயலவில்லை. இதனால் கட்டிட உபவிதி நிபந்தனைகளின்படி வரைபடவாளர்களால் வருடத்திற்கு 10 வரைபடம் தயார் செய்ய இயலவில்லை. இது போன்ற நிபந்தனை வேறு எந்த மாநகராட்சியிலும் இல்லை.<br>எனவே ஏற்கனவே மாமன்றம் நிறைவேற்றியுள்ள மாநகராட்சி உபவிதியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை எண்.5ஐ நீக்கம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br>எப்1/705/02 | 58) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியில் படகு குழாம் சுற்றிலும் இரும்பு வேலிகள் (Chain Fencing) மற்றும் மின்வசதி செய்யும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.29,60,000/–க்கு பணிக்கு 13.03.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1)திரு. V.Thangaraj<br>மதிப்பீட்டை விட 0.55% குறைவு (ரூ.2693334.00)<br><br>2)திரு. J.Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 5.46% அதிகம் (ரூ.2856210.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான | 59) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மதிப்பீடு கொடுத்துள்ள திரு.V.தங்கராஜ் அவர்களின் (மதிப்பீட்டைவிட 0.55%குறைவு(ரூ.2693334.00)ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.55% குறைவாக கொடுத்த திரு. V.Thangaraj ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>E1/0119/2018 | |
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியில் ரோச் பூங்கா எதிரில் உள்ள இடத்தில் புதிய படகு குழாய் (Boat Jetty) நிர்வாக அலுவலகம், பயிற்றுநர் அறை, சிற்றுண்டி சாலை , சிறுவர் விளையாடும் பொருட்கள், காவலர் அறை அமைத்தல் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.50,00,000/–க்கு பணிக்கு 13.03.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1. திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 0.13% குறைவு (ரூ. 3787478.50)<br>2. திரு. S.Rambola<br>மதிப்பீட்டை விட 1.03% அதிகம் (ரூ.**3831430**.50)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. சுதர்சன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.13% குறைவு (ரூ.3787478.50) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.13% குறைவாக கொடுத்த திரு. S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். E1/0119/2018 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **26.03.2018**